# சிங்கப்பூர் செர்ரி மரம்

சிங்கப்பூர் செர்ரி மரம் (சுமார் 12 மீட்டர்  வரை வளரும்) குட்டையாக இருக்கும். இதன் கிளைகள் பரந்து விரிந்திருப்பதால், இது ஒரு பெரிய குடையைப் போலத் தோன்றும். வறண்ட பகுதிகளிலும் வேகமாக வளரும் திறன் கொண்டது.







### இலைகள்

இதன் இலை மென்மையாகவும் நீள்-வட்டமாகவும் கூர்மையான நுனியோடும் இருக்கும். இலைகளின் மேல் நுண்ணிய உரோமங்கள் இருக்கும். குதிக்கும் சிலந்திகளும் (two-striped jumping spider) மற்ற பூச்சிகளும் இலைகளுக்கிடையில் மறைந்திருக்கும்.

இந்த இலைகளைத் தொட்டுப் பாருங்கள். இலையின் மேல் நீரைத் தெளித்தால் அது ஒட்டிக்கொள்கிறதா அல்லது வடிந்து விடுகிறதா?





### மலர்கள்

இந்த மரத்தில் சிறிய வெள்ளை மலர்கள் பூக்கும். ஒவ்வொரு மலரிலும் எத்தனை இதழ்கள் இருக்கின்றன என்று கையில் எடுத்து எண்ணிப் பாருங்கள். இம்மலர்களைச் சுற்றி தேனீக்களும் வண்ணத்துப்பூச்சிகளும் வட்டமிடும். குறிப்பாக மகரந்த சேகரிப்பில் முக்கியப் பங்காற்றும் சிறிய தேனீ (dwarf honey bee) அடிக்கடி வந்து தேன் சேகரிப்பதைக் காணலாம்.







### பழங்கள்

தேன்பழம் சிறியதாகவும் உருண்டையாகவும் சதை மிகுந்ததாகவும் இருக்கும். அதன் உள்ளே சிறிய மஞ்சள் நிற விதைகள் நிறைந்து காணப்படும். காய் பச்சை நிறத்திலும், பழம் சிவப்பு நிறத்திலும் இருக்கும். நல்ல மணத்துடனும் சுவையுடனும் இருக்கும்.

பகலில் செம்மீசைச் சின்னான் (red-whiskered bulbul), செவ்வலகுப் பூஞ்சிட்டு (pale-billed flowerpecker) போன்ற பறவைகள் இப்பழங்களை விரும்பி உண்ணும். இரவில் சிறிய பழ வௌவால்கள் (fruit bats) இம்மரத்தில் படபடவென சிறகடித்தும், மெல்லிய குரலெழுப்பிக் கொண்டும் பழங்களைச் சாப்பிடுவதைக் காணலாம். நீங்கள் இந்தப் பழங்களைச் சாப்பிட்டதுண்டா? அதன் சுவை எப்படி இருந்தது?



### மரப்பட்டை

இந்த மரத்தின் பட்டை முதலில் மிருதுவாக இருக்கும். பின்னர் அது கடினமாகி, மேடு பள்ளங்களோடும் காணப்படும். பட்டையின் நிறமும் தடிமனும் வயதுக்கு ஏற்ப மாறுபடும்.

எறும்புகள், உணவு தேடிச் செல்ல,  மரத்தண்டில் உள்ள மேடுபள்ளங்களை பயன்படுத்துகின்றன.

மரத்தின் பட்டையை நன்கு கவனியுங்கள். இன்னும் எத்தனையோ பூச்சிகளும், சிலந்திகளும் அங்கு ஒளிந்திருப்பதைக் காணலாம்!





Illustration and Design: Labonie Roy
Tamil Translation: Sarumathi and P. Jeganathan

This work is licensed to Nature Classrooms under CC BY-NC-SA 4.0.